### சட்டமன்றத் தேர்தல் :

# 15 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!






சென்னை, மார்ச். 7 -

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

15 வது நாளாக நேற்று முன்தினம் (6.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க.வும் இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சு வார்த்தையையும் தொடங்கியது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

15வது நாளான நேற்று முன்தினம் (06.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், கழக பொருளாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்பட்டது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் நேற்றுடன் (மார்ச் 6ஆம் தேதி) நிறைவடைந்தது.

### எம்.ஜி.ஆர். திரைப்படம் – தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில்

# ரூ.39.33 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று படப்பிடிப்புத் தளங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 7–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று படப்பிடிப்புத் தளங்கள் கொண்ட திரைப்பட படைப்பாக்க வளாகத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்ப கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப் பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதாகும்.

இந்நிறுவனம் அமைந்துள்ள சென்னை தரமணி, மிகுந்த அளவில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கல்வி நிறுவனங்களும், மிகப் பெரிய அளவிலான தகவல் தொழில்நுட்ப பூங்கா போன்றவைகள் அமைந்துள்ள ஒரு மையப் பகுதியாகும். இதனால், தரமணி தகவல் தொழில்நுட்பம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் குடியிருப்பு வசதிகள் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் வளர்ந்து வரும் நகர்ப்புற பகுதியாக திகழ்கிறது. இத்தகைய மையப் பகுதியில் திரைப்படப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

தரமணியில் படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கும்பட்சத்தில் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது படப்பிடிப்புகளுக்காக வெளிமாநிலங்களுக்குச் செல்லும் சிரமத்தைத் தவிர்க்கவும், ஒரே வளாகத்தினுள் பலதரப்பட்ட படப்பிடிப்புகளை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்பினை அதிகரித்திடும் நோக்கிலும், திரைப்படப் பயிற்சி நிறுவன மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் அறிவிப்பின்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் திரைப்பட படைப்பாக்க வளாகம் எனும் பெயரில் மூன்று அதிநவீன படப்பிடிப்பு தளங்கள் 39.33 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இப்படைப்பக வளாகத்தில், 150' x 100' என்ற அளவில் 18,768.86 சதுர அடி பரப்பளவில் ஒரு படப்பிடிப்பு தளமும், 120' x 80' என்ற அளவில் 26,150.70 சதுர அடி (13,075.35 x 2) பரப்பளவில் இரண்டு படப்பிடிப்பு தளங்களும், என மொத்தம் மூன்று படப்பிடிப்புத் தளங்கள் 44,919.56 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு படப்பிடிப்பு தளத்திலும் ஒரு படப்பிடிப்பு அரங்கு, ஒரு வரவேற்பு அறை, நான்கு எண்ணிக்கையில் இணைக் கழிப்பறையுடன் கூடிய ஒப்பனை அறைகள், ஒரு உணவு அறை, நடைபாதை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித் தனி இரண்டு கழிப்பறைகள், ஒரு மின்அறை, குடிநீர் வசதி உள்ளிட்ட முழுமையான வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் திரைப்பட படைப்பாக்க வளாகத்தில் மூன்று படப்பிடிப்பு தளங்களுக்காக 500 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளும் மற்றும் 165 கிலோவாட் திறன் கொண்ட ஜெனரேட்டர் வசதியுடன் மின்விநியோக வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த அதிநவீன திரைப்பட படைப்பாக்க வளாகத்தில் படப்பிடிப்பு தளங்கள் மூலம் திரைப்படத் துறையினருக்கு மட்டுமல்லாது சின்னத்திரை தொடர்கள் தயாரிப்பு நிறுவனங்கள், டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்குநர்கள் மற்றும் நிகழ்வு மேலாண்மை (Event Management) துறைகளுக்கும் மிகுந்த பயன் ஏற்படும். உயர் தரமான ஒளிப்பதிவு வசதிகள், பரந்த பரப்பளவு மற்றும் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப வசதிகள் காரணமாக திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்கள், வலைத் தொடர்கள், விளம்பரப் படங்கள், நேரடி நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளை தொழில்முறை முறையில் நடத்துவதற்கு இத்தளங்கள் சிறந்த மையமாக விளங்கும். இதன் மூலம் தமிழ்நாடு திரைப்பட மற்றும் சின்னத்திரை துறைகளின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் கிடைப்பதுடன், மாநிலம் ஒரு முக்கியமான படைப்பாற்றல் மற்றும் தயாரிப்பு மையமாக உருவெடுக்க உதவும். இத்தகைய அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய திரைப்பட படைப்பாக்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளதால், திரைத்துறையினருக்கு மட்டுமின்றி தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் கல்வித்தரத்தையும் உயர்த்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

மேற்படி திரைப்பட படைப்பாக்க வளாகத்தில் உள்ள ஒரு படப்பிடிப்பு தளத்தில் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப காலகட்டத்திற்கேற்ப, LED திரைகள், கேமரா டிராக்கிங், ரியல்-டைம் கணினி கிராபிக்ஸ் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் இணைக்கப்பட்டுள்ள மெய்நிகர் தயாரிப்பு (Virtual Production) ஸ்டுடியோ அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சியில் 9ஆம் தேதி மாநில மாநாடு!

# சிவகங்கை மாவட்டத்தில் இருந்து 100வாகனங்களில் செல்ல முடிவு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தகவல்!

சிவகங்கை, மார்ச் 7 –

வருகிற ஒன்பதாம் தேதி திங்கட் கிழமை கழகத்தின் ஒன்பதாவது மாநில மாநாடு திருச்சி அருகே உள்ள சிறுகனூரில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள வேண்டும் முதல்வர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்கள். இதில் சிவகங்கை மாவட்டத்தில் இருந்து 100க்கும் வாகனங்களில் தொண்டர்கள் மாநாட்டிற்குசெல்ல முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் திருப்பத்தூரில் உள்ள தனியார் மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில். முன்னாள் அமைச்சர் மூ. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

வருகிற ஒன்பதாம் தேதி நமது கழகத் தலைவர் கலைஞர் வழிகாட்டுதல் பேரில் திருச்சியில் 9ம்தேதி கழக மாநில மாநாடு நடைபெறுவதாக தளபதி அவர்கள் அறிவித்துள்ளார்கள். நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கு முன் இந்த மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கு அடித்தளமாக அமைய உள்ளது. இந்த மாநாட்டில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள். இந்த மாநாட்டில் நமது மாவட்டத்திலிருந்து அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும். எனவே திருச்சி மாவட்டத்திற்கு அருகாமையில் உள்ள நமது மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் சார்பு அணி நிர்வாகிகள் திரளான பொதுமக்களுடன் கலந்து கொண்டு மாநாட்டினை சிறப்பிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். மாநாட்டிற்கு செல்வதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர் பேரூர்க் கழக நிர்வாகிகள் ஈடுபடவேண்டும். மேலும் வாக்காளர் பட்டியல் தொடர்பாக சரிபார்த்தல் பணியில் ஈடுபடவேண்டும். கழகத்தினர் ஒன்றுபட்டு தேர்தலில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசினார்.

இந்தக் கூட்டத்தில் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜ், நல்ல சேதுபதி, மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, நகர் கழகச் செயலாளர்கள் க.பொன்னுச் சாமி, சி.எம்.துரை.ஆனந்த், பெரி. பாலா, மாநகர துணை மேயர் மாநகரச் செயலாளர் நா.குணசேகரன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, பொதுக் குழு உறுப்பினர்கள் ந.அம்பலமுத்து,




பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எஸ்.சண்முக வடிவேல் கே.பாலசுப்பிரமணியன், புமணி, விராமதி மாணிக்கம், பி.செல்வராஜ், நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், சுப.சின்னத்துரை, நாகனி ரவி, வே.பூபால சிங்கம், லெ. மு.ரவிச்சந்திரன், ஆர்..எம்.கென்னடி, யோக. கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கிய சாமி, ஆறு.செல்வராஜன், வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், மா.அண்ணாதுரை, துரை.ராஜா மணி, அ.முத்துசாமி, எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்தக் காளை, எம்.ஏ.கடம்பசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், ராசு, நாகூர்கனி, கனி, பி.ஏ.நஜ்முதீன், ஜெயராமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், மாவட்டக் கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, அயலக அணி சன்சீமான் சுப்பையா, மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என். எம்.சாக்ளா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் வருகிற 9ம்தேதி திருச்சி சிறுகனூரில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டிற்கு சிவகங்கை மாவட்டத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட வாகனங்கள் மூலம் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பங்கேற்க தீர்மானிக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கோ. இளங்கோவன்

**மார்ச் 7 (2015)**



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**